सत्यमेव जयते

# GOVERNMENT OF PUDUCHERRY

## EXPERT GROUP RECOMMENDATION ON THE SOCIAL IMPACT ASSESSMENT REPORT

ACQUISITION OF LAND AT R.S.No.1/3 & 1/6 OF No. 35-OULGARET REVENUE VILLAGE, TO AN EXTENT OF 00-06-90 HAC PUDUCHERRY DISTRICT FOR THE PUBLIC PURPOSE OF "CONSTRUCTION OF MASANORY DRAIN FROM KURUMAMPET HOUSING BOARD TO PITCHAI VEERANPET"

Prepared and Submitted by :
M. Kandasamy,
COMMISSIONER
PONDICHERRY MUNICIPALITY

## 1. CONSTITUTION OF EXPERT GROUP:

1.1 The U.T Administration of Puducherry has constituted an independent multidisciplinary expert group vide G.O. Ms. No. 16/2024 dated 06.08.2024 of Department of Revenue and Disaster Management, Puducherry for appraisal of Social Impact Assessment report prepared by the SIA team U/s. 7(1) of the Right to Fair Compensation and Transparency in Land Acquisition, Rehabilitation and Resettlement Act, 2013 for the purpose of acquisition of lands in R.S. No. 1/3 & 1/6 of 35-Oulgaret Revenue Village of Puducherry District. The expert Group comprises the following officials/non-officials:

| Sl. No | Name & Designation (Tvl.) | Department/Organisation |
|---|---|---|
| 1. | M. Kandasamy, Commissioner, | Pondicherry Municipality, Puducherry |
| 2. | M. Kandarselvam, Chief Town Planner | Town and Country Planning Department, Puducherry |
| 3. | Dr. C. Aruna, Assistant Professor, | Department of Sociology, Pondicherry University. |
| 4. | Dr. C. Satish Kumar, Assistant Professor | Department of Social Work, Pondicherry University. |
| 5. | R. Malaivasan Executive Engineer | Oulgaret Municipality, Puducherry |
| 6. | G. Mohan, Secretary | Sharon Society of Pondicherry, No.41, 3rd cross, Kurinji Nagar, Lawspet, Puducherry |
| 7. | Sr. Arokiya Selvi | Joy Home, Immaculate Heart of Mary Social Service Society, No.36, Uppalam Road, Colas Nagar, Puducherry – 1. |

## 2. MANDATE OF EXPERT GROUP:

2.1 The Expert group constituted under sub-section (1) of Section 7 of the Right to Fair Compensation and Transparency in Land Acquisition, Rehabilitation and Resettlement Act, 2013 after examining the Social Assessment Report submitted by the SIA team should analyze as to:-

(i) Whether the project serves any public purpose? ;

(ii) Whether the potential benefits outweigh the social costs and adverse social impact? ;

(iii) Whether there is other less displacing option available with effective Rehabilitation plan? ; and

(iv) Whether the extent of land proposed to be acquired is the absolute bare minimum extent needed for the project?

2.2 The meeting of Expert group was held on 07.11.2024 at 3.30 PM in the chamber of the Commissioner, Pondicherry Municipality and was attended by the members except Dr. C. Aruna, Assistant Professor, Department of Social Work, Pondicherry University and Dr. C. Satish Kumar, Assistant Professor, Department of Social Work, Pondicherry University even though advance intimation was given to them. Thiru. Kandar Selvam, Chief Town Planner had retired. Therefore, Thiru. Elango, Junior Town Planner attended the meeting on behalf of the present Chief Town Planner. The Social Impact Report prepared in

Kandasamy

relation to the acquisition of lands at 35-Oulgaret Revenue Village of Puducherry District for the purpose of "Construction of Masanory Drain from Kurumampet Housing Board to Pitchai Veeranpet", was examined by the Expert Group. Copy of the SIA report was also shared among the Group Members. Further, the said report was also explained to the Members who were present during the meeting on 07.11.2024.

2.3. During field visit on 07.11.2024 at about 04.30 PM it was ascertained that the Public Works Department has already constructed the drain. The drain is a masonry structure admeasuring 00-06-90 HAC in R.S No. 1/3 & 1/6 of 35-Oulgaret Revenue Village as identified by the Deputy Surveyor of the Office of the Sub-Collector (Revenue) North, Puducherry

2.3 Post field visit, the Chairman suggested that the Members of the Expert Group may inspect/visit the site and submit their recommendations individually, if they desire so. The Expert Group examined the SIA study report, the proceedings of public hearing, the details of Socio Economic Study conducted, and notified Master plan pertaining to the area.

2.5 The Expert Group observed that the acquisition of Construction of Masonry Drain from Kurumampet Housing Board to Pitchaiveeranpet is for a valid public purpose that would ease the flow of the drainage and storm water from Kurumampet Housing Board to Pitchaiveeranpet.

2.6 The Expert Group observed that the entire land proposed for acquisition belongs to single owner and the socio-economic status of the owner and his family is also sound. The Social Impact Assessment report revealed that the land owner has two sons and one daughter. One of the sons is an Engineering graduate and another one is Medical graduate. His daughter is a science graduate. Hence, livelihood of no individual is affected due to the present land acquisition. It is further observed that there is no person with disability, mentally challenged, orphan or destitute affected by this acquisition. There is no adverse impact on any Social Cultural Organization, Political organization, Civic Society Organization and Administrative Organization getting affected by the acquisition. Therefore, the acquisition proposal does not envisage displacement of any project affected person and consequently the need for a rehabilitation plan does not arise.

3. <u>SOCIAL COSTS AND IMPACTS:</u>

3.1 The acquisition towards Construction of Masanory Drain from Kurumampet Housing Board to Pitchaiveeranpet would help the residents of Kurumampet and its surrounding area as it will be a permanent solution for drainage problem. The land proposed for acquisition is a narrow stretch of land located North to South, to a length of about 180.20 metres in eastern side and 175.20 metres in western side and maximum width

Kandasamy

of about 10.20 metres in Northern side and 3.40 metres in the southern side and hence there is no impact on the social cost to the village.

## 4. EXTENT REQUIREMENT:

4.1 The Expert group observed that the acquisition is being undertaken to the barest minimum extent of 00-06-90 HAC wherein the masonry drain has already been constructed by Public Works Department and therefore there is no impact to anyone due to implementation of the project. Further, there are no suitable alternate Government lands available for the proposed acquisition.

## 5. CONCLUSION/RECOMMENDATION:

5.1 After going through the SIA report and social profile of the area the Expert group made the following observations/recommendations:

(i) Land owner is ready to give the land provided he is adequately compensated as per provisions of RFCTLARR Act, 2013;

(ii) The Public Works Department has already constructed the masonry drain in the land and hence the said land needs to be acquired as per law;

(iii) The proposed acquisition shall provide drainage and storm water drain to the residents of Kurumampet and its surrounding areas;

(iv) No suitable alternate Government lands are available for the proposed acquisition; and

(v) The Social Impact Assessment is found to be appropriate.

28/11/24
R. Malaiyasan
Executive Engineer
Oulgaret Municipality
EXECUTIVE ENGINEER
OULGARET MUNICIPALITY
PUDUCHERRY-605 005.

G. Mohan,
Secretary
Sharon Society of
Pondicherry, No.41, 3rd cross,
Kurinji Nagar, Lawspet,
Puducherry
SHARON SOCIETY OF PONDICHERRY

Sr. Arokiya Selvi
Joy Home,
Immaculate Heart of Mary
Social Service Society,
No.36, Uppalam Road,
Colas Nagar,
Puducherry – 1
IMMACULATE HEART OF MARY
SOCIAL SERVICE SOCIETY
"JOY HOME"
No.36, Colas Nagar, Uppalam Main Road
Pondicherry - 605 001.

K. Veeraselvam,
Chief Town Planner,
Town & Country Planning Department
CHIEF TOWN PLANNER
TOWN & COUNTRY PLANNING DEPT.,
PUDUCHERRY.

28/11/2024
M. Kandasamy,
Commissioner,
Pondicherry Municipality
COMMISSIONER
PONDICHERRY MUNICIPALITY
PUDUCHERRY.

**புதுச்சேரி மாவட்டம், 35 - உழவர்கரை வருவாய் கிராமத்தில், "குரும்பாபேட் வீட்டு வசதி வாரியத்தில் இருந்து பிச்சைவீரன்பேட் வரை கால்வாய் அமைப்பதற்காக" நிலம் கையகப்படுத்துதல்தொடர்பான சமூக தாக்க கணிப்பு அறிக்கையை மதிப்பீடு செய்வதற்காகநாளது 06.08.2024 தேதியிட்ட வருவாய் துறையின் பல்வகை அரசாணை எண். 16/2024 -ன்படி அமைக்கப்பட்ட பல்துறை வல்லுநர் குழுவின் அறிக்கை**

****

**<u>பல்துறை நிபுணர் குழு அமைப்பு :</u>**

புதுச்சேரி அரசின் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் 06.08.2024 தேதியிட்ட பல்வகை அரசாணை எண் .16/2024 இன் படி. 35- உழவர்கரை வருவாய் கிராமத்தில் R.S. No. 1/3 மற்றும் 1/6 இல் மேற்கொள்ளப்படவுள்ள நில ஆர்ஜிதம் தொடர்பாக சமூக தாக்க மதிப்பீட்டு குழுவால்(SIA) ஆய்வு மேற்கொள்ளப்பட்டு சமூக தாக்க மதிப்பீட்டு அறிக்கையானது தயாரிக்கப்பட்டது. இந்த அறிக்கையினை நிலம் கையகப்படுத்தல், மறுவாழ்வளிப்பு மற்றும் மறுகுடியமர்வில் நேரிய சரியீடு மற்றும் வெளிப்படைத்தன்மை உரிமை சட்டம் 2013–ன் பிரிவு –7, உட்பிரிவு (1) –ன்படி, உரிய ஆய்வு மேற்கொண்டு பரிந்துரைகளை வழங்க வேண்டி அமைக்கப்பட்ட இந்த பல்துறை நிபுணர் குழுவில் கீழ்கண்ட அரசு மற்றும் அரசு சாராத உறுப்பினர்கள் இடம்பெற்றுள்ளனர்.

| *வ. எண்* | *பெயர் மற்றும் பதவி* | *துறை/அமைப்பு* |
|---|---|---|
| 1 | M. கந்தசாமி,<br>ஆணையர் | பாண்டிச்சேரி நகராட்சி, புதுச்சேரி<br>... *தலைவர்* |
| 2 | M . கந்தர்செல்வம்,<br>தலைமை நகர அமைப்பாளர் | நகர மற்றும் கிராம அமைப்புத் துறை ,<br>புதுச்சேரி |
| 3 | டாக்டர். சி. அருணா,<br>உதவி பேராசிரியர் | சமூகவியல் துறை ,<br>புதுவை பல்கலைக்கழகம் |
| 4 | டாக்டர். சி. சதீஷ்குமார்,<br>உதவி பேராசிரியர் | சமூகப் பணித்துறை ,<br>புதுவை பல்கலைக்கழகம் |
| 5 | R . மலைவாசன் ,<br>செயற்பொறியாளர் | உழவர்கரை நகராட்சி ,<br>உழவர்கரை |
| 6 | G. மோகன், செயலாளர் | பாண்டிச்சேரி ஷரோன் சொசைட்டி,<br>41, மூன்றாவது குறுக்கு தெரு,குறிஞ்சி நகர் ,<br>லாஸ்பேட் , புதுச்சேரி |
| 6 | சகோ . ஆரோக்கியசெல்வி | ஜாய் இல்லம் , புனித இருதய மேரி சமூக சேவை சங்கம், 36, உப்பளம் சாலை, கோலாஸ் நகர், புதுச்சேரி . |

**<u>நிபுணர் குழுவின் கடமைகள் :-</u>**

நிலம் கையகப்படுத்தல், மறுவாழ்வளிப்பு மற்றும் மறுகுடியமர்வில் நேரிய சரியீடு மற்றும் வெளிப்படைத்தன்மை உரிமை சட்டம் 2013-ன் பிரிவு -7, உட்பிரிவு (1) –ன்படி, சமூக தாக்க கணிப்பு குழுவின் அறிக்கையினை கீழ்கண்ட கூறுகளின் அடிப்படையில் ஆய்வு செய்து உரிய பரிந்துரை வழங்குவதாகும்.

- இந்தத் திட்டம் ஏதேனும் பொது நோக்கத்திற்குப் பயன்படுகிறதா?.
- சாத்தியமான நன்மைகள் சமூக செலவுகள் மற்றும் பாதகமான சமூக தாக்கங்களை விட அதிகமாக உள்ளதா?.
- கையகப்படுத்த முன்மொழியப்பட்ட நிலத்தின் அளவு, திட்டத்திற்குத் தேவையான முழுமையான குறைந்தபட்ச அளவாக உள்ளதா?.
- வேறு குறைவான இடப்பெயர்ச்சி விருப்பங்கள் உள்ளனவா?

இந்த நிபுணர் குழுவின் கூட்டமானது நாளது 07.11.2024 அன்று பிற்பகல் 3.30 மணியளவில் புதுச்சேரி நகராட்சி ஆணையரின் அலுவலகத்தில் நடைபெற்றது. குழுவின் உறுப்பினர்களில் முனைவர் C. அருணா, உதவி பேராசிரியர், சமூகவியல்துறை , புதுவை பல்கலை கழகம் மற்றும் முனைவர் C . சதீஷ்குமார் , உதவி பேராசிரியர் , சமூகப்பணித்துறை , புதுவை பல்கலை கழகம் ஆகியோர் தவிர்த்து, பிற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர் . தலைமை நகர அமைப்பாளர் சார்பில் நகர மற்றும் கிராம அமைப்பு துரையின் இளநிலை நகர அமைப்பாளர் திரு. இளங்கோ கலந்து கொண்டார். இந்த கூட்டத்தில், புதுச்சேரி மாவட்டம் 35 - உழவர்கரை வருவாய் கிராமத்தில் "குரும்பாபேட் வீட்டு வசதி வாரியத்தில் இருந்து பிச்சைவீரன்பேட் வரை கால்வாய் அமைப்பது " என்ற பொது நோக்கத்திற்காக மேற்கொள்ளப்படவுள்ள நில ஆர்ஜிதம் தொடர்பாக வழங்கப்பட்ட சமூக தாக்க கணிப்பு குழுவின் அறிக்கையானது அனைத்து உறுப்பினர்களின் பார்வைக்கு வழங்கப்பட்டு, இது தொடர்பாக விரிவாக ஆலோசிக்கப்பட்டது.

மேலும் 07.11.2024 அன்று மாலை 4.30 மணியளவில் உறுப்பினர்களால் கள ஆய்வும் மேற்கொள்ளப்பட்டபோது, குறிப்பிட்ட அந்த நிலப்பரப்பில், புதுச்சேரி பொதுப்பணித்துறையினரால் முன்னதாகவே கழிவு நீர் கால்வாய் கட்டப்பட்டுள்ளது உறுதிப்படுத்தப்பட்டது. கள ஆய்வின் போது, சார்பு ஆட்சியர் (வடக்கு) அலுவலத்தில் இருந்து பங்கேற்ற துணை அளவையாளரும் இதனை உறுதி செய்தார்.

சமூக தாக்க கணிப்பு குழுவின் ஆய்வு அறிக்கை, பொது விசாரணையின் நடவடிக்கைகள், நடத்தப்பட்ட சமூகப் பொருளாதார ஆய்வின் விவரங்கள், சுற்றுப்புற சூழல் தொடர்பான ஆய்வு அறிக்கைகள் மற்றும் அப்பகுதி தொடர்பான மாஸ்டர் பிளான் ஆகியவற்றை ஆய்வு செய்ததோடு கூடுதலாக கள ஆய்வும் நிபுணர் குழுவால் மேற்கொள்ளப்பட்டது. கள ஆய்வுக்கு பிறகு , உறுப்பினர்கள் கள ஆய்வு செய்ய விரும்பினால் அவ்வாறு மேற்கொள்ளவும் , அதன் அடிப்படையில் தனித்தனியாகவும் தங்கள் பரிந்துரைகளை குழுவின் தலைவரிடம் வழங்கலாம் என தெரிவிக்கப்பட்டது.

"குரும்பாபேட் வீட்டு வசதி வாரியத்தில் இருந்து பிச்சைவீரன்பேட் வரை கால்வாய் அமைப்பதற்காக " மேற்கொள்ளப்படவுள்ள இந்த நில ஆர்ஜிதமானது, கழிவு நீர் மற்றும் மழை நீர் விரைவாக வடிய வேண்டும் என்ற நல்ல பொது நோக்கத்திற்காகவே மேற்கொள்ளப்படுகிறது.

கையகப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள நிலப்பகுதிக்கு ஒருவர் மட்டுமே உரிமையாளர், அவருடைய சமூக ,பொருளாதார நிலை என்பது வலுவானதாகவே உள்ளது. சமூக தாக்க கணிப்பு அறிக்கையின்படி அவருக்கு இரண்டு மகன்கள் மற்றும் ஒரு மகள் உள்ளனர். மகன்களில் ஒருவர் பொறியியல் பட்டதாரி ஆகவும் மற்றொருவர் மருத்துவ பட்டதாரியாகவும் உள்ளனர், மகள் ஒரு அறிவியல் பட்டதாரி என தெரியவருகிறது. எனவே இந்த நில கையகப்படுத்தலால் அவருக்கு எந்தவித வாழ்வாதார பாதிப்பும் இல்லை என கருதலாம். மேலும் இந்த நிலம் கையகப்படுத்துதலால் மாற்றுத் திறனாளிகள், மனநலம் பாதிக்கப்பட்டவர்கள், ஆதரவற்றவர்கள், சமூக கலாச்சார அமைப்புகள், அரசியல் அமைப்புகள், குடிமை சமூக அமைப்புகள் மற்றும் நிர்வாக அமைப்புகள் எதுவும் பாதிக்கப்படவில்லை என்பதோடு, பெரும்பாலான மக்கள் சுயதொழில் மற்றும் ஓய்வூதியம் பெறுபவர்கள் என்பதால், வாழ்வாதாரமும் பாதிக்கப்படவில்லை. எனவே, மறுவாழ்வளிப்பு மற்றும் மறுகுடியமர்வு என்பதற்கான தேவை எழவில்லை.

**சமூக செலவுகள் மற்றும் தாக்கங்கள்**

நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு கழிவு நீர் கால்வாய் அமைப்பது என்பது, பொதுமக்கள் பெருமளவு வசிக்கும் குரும்பாபேட் மற்றும் சுற்றுப்புற பகுதிகளின் கழிவு நீர் மற்றும் மழை நீர் விரைவாக வடிவதற்கான ஒரு நிரந்தர தீர்வாக அமையும். ஆர்ஜிதம் செய்ய உத்தேசித்துள்ள நிலப்பகுதியானது வடக்கு - தெற்காக ஒரு குறுகலான பகுதியாகவும், கிழக்கு புறம் 180.20 மீட்டர் மேற்கு புறம் 175.20 மீட்டர் அதிக பட்ச அகலமாக வடக்கில் 10.20 மீட்டர் அகலமும் , தெற்கில் 3.40 மீட்டர் அகலமும் உடையதாக இருப்பதால், இந்த நிலம் கையகப்படுத்தலால் கிராமத்திற்கு எந்த பாதிப்பும் இல்லை.

web Editon

**<u>தேவையான அளவு</u>**

00.06.90 HAC என்ற மிகக் குறைந்த அளவிலேயே தற்போதைய கையகப்படுத்தல் மேற்கொள்ளப்படுகிறது, மேலும் பொதுப்பணித்துறையில் ஏற்கனவே, கழிவு நீர் கால்வாய் கட்டப்பட்டுள்ள பகுதியே கையகப்படுத்தப் படுவதால் யாருக்கும் எந்த பாதிப்பும் இல்லை என்றே இக்குழு கருதுகிறது. நிலம் கையகப்படுத்த உத்தேசித்துள்ள பகுதியில் அரசுக்கு சொந்தமான புறம்போக்கு இடம் எதுவும் இத்திட்டத்திற்கு ஏற்ற வகையில் மாற்றாக இப்பகுதியில் இல்லை.

**<u>முடிவு/பரிந்துரை</u>**

சமூக தாக்க கணிப்பு அறிக்கை, பல்துறை வல்லுநர்கள் வழங்கிய கருத்துகளின் அடிப்படையில் கீழ்கண்ட பரிந்துரைகளை இந்த நிபுணர் குழுவானது வழங்குகிறது :-

1) குறிப்பிட்ட நிலத்தின் உரிமையாளர் அந்த இடத்தை தர தயாராக இருக்கிறார், எனவே நிலம் கையகப்படுத்தல், மறுவாழ்வளிப்பு மற்றும் மறுகுடியமர்வில் நேரிய சரியீடு மற்றும் வெளிப்படைத்தன்மை உரிமை சட்டம், 2013- ன் படி, நியாயமான இழப்பீடு மற்றும் வெளிப்படைத்தன்மை ஆகிய விதிகளின் கீழ் மதிப்பிடப்பட்ட இழப்பீடு வழங்க பரிந்துரைக்கிறது.

2) குறிப்பிட்ட அந்த நிலத்தில் பொதுப்பணித்துறையானது ஏற்கனவே கழிவு நீர் கால்வாய் கட்டி முடித்துவிட்டதன் காரணமாக , உரிய சட்ட வழிமுறைகளின்படி மேற்படி நிலப்பகுதியானது கையகப்படுத்தப்பட்ட வேண்டும்.

3) கழிவு நீர் கால்வாய் அமைப்பதற்கான இந்த நில ஆர்ஜிதம் வாயிலாக, குரும்பாபேட் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளுக்கு முறையான வடிகால் வசதி ஏற்படும்.

4) கையகப்படுத்த உத்தேசித்துள்ள பகுதியில் அரசுக்கு சொந்தமான புறம்போக்கு இடம் எதுவும் இத்திட்டத்திற்கு ஏற்ற வகையில் மாற்றாக இப்பகுதியில் இல்லை

5) சமூக தாக்க கணிப்பு என்பது சரியாகவே உள்ளது என இக்குழு கருதுகிறது .

***